# ஆத்மா

ஆவணி. 2005 தேடல் 23 விலை ருபா 5


விவாதங்களின்
முடிவில்
வெற்றி தோல்விகள்
மனிதர்களுக்கா
உண்மைகளுக்கா?

ஈரோடு தமிழன்பன்

## எப்ப என்ர வீட்ட விடப்போறா....?

புத்த சிறிசேனாவுக்கும்
உன்ர ஆக்களுக்கும்
யோசேப்பும் அவன்ர
குடும்பமும் எழுதிறது.
நீ வெசாக் கொண்டாடினது
உனக்கே
சரியாப்படுதா சொல்லுபாப்பம்
ஏனைன் றோட்டும் - சுவாமி
தென்னந் தோட்டமும்
இராசமுத்துவின்ர வளவும்
உன்ரையே ?அல்லது
உன்ர கொப்பன்ர காணியே ?
எங்கட காணி பூமி எல்லாத்தையும்
வழிச்சு துடைச்சு
பாதுகாப்பு வலயமாக்கிப்போட்டு அதுக்குள்ள
வெளிச்சக்கூடு ஏத்திறியே
நீ நினைச்சியாக்கும்
வெளிச்சக்கூடும்
வெசாக்கூடும்
நீ குடுத்த கிரீபத்தும்
எங்கள ஒண்டாக்கியிடும் என்று.
சும்மா கனவு காணாத
இஞ்ச
எங்கட கோயில் குளமெல்லாம்
மண்மூட அடுக்கி
புல்லு வளர்த்து
சுத்திவர நாய்க்கூடு மாதிரி
அடைச்சு இருக்கிறியள்
நாங்க போங்க வேணுமெண்டா
உன்ர கால புடிக்க வேணும்
தீத்தமாட வேணுமெண்டா
எல்லாத்தையும் கழட்டிப்போட்டு
போக வேணும்
இதுல கிடக்கிற கச்சதீவுக்கு
போய்வாற எங்களுக்கு
"இண்டைக்கு போய் நாளைக்கு
வா" எண்டுறாய்.
பறந்து போற
பாலைதீவுக்கு
பாஸ் கேட்கிறாய்.
சிறுத்தீவில இருக்கிற கோயில
நீ அழிச்சே போட்டியே
ஏனைன் றோட்டால போகேக்க
எத்தின கோயில்
வெறும் தூணுகளோட கிடக்கு
தெரியுமே
தொண்ணூற்று அஞ்சில
மூகமால மாதா கோயில் எத்தின பேருக்கு
அடைக்கலம் குடுத்தது
அந்த ஆல மரத்த மறக்க ஏலுமே
அதச்சுற்றி எத்தின குடும்பம்
இருந்ததெண்டு உனக்கு தெரியுமே
இண்டைக்கு
அடைக்கலம் தந்த அந்த கோயிலும்
ஆலமரமும்
எப்பிடி கேவலமாய்க் கிடக்குது
மூகமாலக் கோயில் திருவிழா எண்டா
மூழுச்சனமும் குவியும்
அது - உன்ர அதி உயர் பாதுகாப்பு
இடத்துக்குள்ள
பத்தையாக்கிடக்குது
ஆனா நீ
நாங்க கும்பிடுற இடமெல்லாத்தையும்
புடிச்சு வைச்சுக்கொண்டு
வெசாக் கொண்டாடுறாய்.
ஆறப்போக்காட்டுறாய்
ஒரு கையில துவக்கு
மற்றக் கையில சாப்பாட்டுப் பாசல்
புத்தருக்கு என்ன புகஞ்சான் காட்டுறியே
எங்கட
தெய்வங்களும் கண்ணத் திறக்கிற
காலம் வராம போகாது
கனகாலம்
அதுகள்
இந்தப் பத்தைக்க கிடக்காதுகள்
தொண்டையில அதுகள் இருக்கும்.
அப்ப தெரியும்
உன்ர வெசாக்கும்
வெளிச்சக்கூடும்
எப்பிடி
எரியும் எண்டு.

— ஞா. யோசேப்பு —







இருட்டிலே இன்னும் அந்த இசை கேட்கிறது
நீண்டு மெலியும் புகைக்கோலம்
அது இப்போது மரண கீதம்
புறா இறந்த ஊர்வலம்
என் விழி நனைகிறது
கறுத்த எழுத்துக்கள் கரைகின்றன.

(நன்றி: நீர் வளையங்கள்)

" மனிதத்தின் இருப்பைத் தேடி "


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜோண் AND இலத்தீன்



ஒன்றரை மாதங்களின் பின்னர் அவன் பாடசாலைக்கு வந்திருந்தான். தவணைப் பரீட்சைக்கு மட்டும் முகம் காட்டிவிட்டு அடுத்த தவணைக்கும் வருகை தரும் வித்தியாச மாணவர்களில் இவனும் ஒருத்தன். "ஏன் வரயில்லை? கனநாளாக் காணயில்லை என்னத்துக்காக நிண்டதெண்டு சொல்லன்" இப்படி ஒரு மாணவனைக் காணும்போது ஏற்படும் மனநிலையை விபரிக்க முடியாது. கைகள் படபடத்தன, ஓங்கி அறைவதற்கு அவைகள் என்னை அவசரப்படுத்தின. நான் அவனோடு பேசுவதைக்கண்ட ஏனைய ஆசிரியர்களும் என்னைச் சூழ்ந்து கொண்டனர். "இவனா ஆடிக்கொருக்கா அமவாசைக் கொருக்கா வாறவன்" இது அவனது சமூகக்கல்வி ஆசிரியரது முறைப்பாடு. "இவயள் விசிற்றிங் லெக்சரர்ஸ்" கணித ஆசிரியர் தனக்கே உரிய பணிவோடு கூறிவிட்டு சென்றார். "பூசைக்குப் போனியா? பிதா சுதன் போடு பார்க்கலாம்" செபங்களுக்குள்ளே சிக்குண்டு கிடக்கும் 'ஆன்மீக..?' பேருரையை அருட்சகோதரி ஆற்றி முடிவில் அவனது காதை ஒரு திருகு திருகிவிட்டு நகர்ந்தார். அவனுக்கு பாடம் எடுக்காத ஆசிரியர்கள் கூட குற்றம் காண தவறவில்லை. அவனோ விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைப்போல தலையைக் கவிழ்ந்தபடியே நின்றிருந்தான். எனினும் அந்த அமைதியை ஆசிரியர் ஒருவரின் குரல் உடைத்தது. "சேர் இவன்தான். நான் உங்களுக்கு சொல்லயில்ல போல. போன திங்கள் நான் வரயிக்க பள்ளிக்கூட உடுப்போட றோட்டில விழுந்து கிடக்கிறதப் பாத்தன். சனம் போகுது. சயிக்கிள நிப்பாட்டியிட்டுப் போய் பார்த்தா இவன். உடன பக்கத்து வீட்டில தண்ணி வாங்கி முகத்தில அடிச்சிட்டு ஆள எழுப்பினான். இவனுக்குள்ள கனக்க பிரச்சினை இருக்குது சேர். சும்மா அடிச்சுப் பிரியோசனம் இல்ல. வடிவா கேளுங்க சேர்." பட்டம் பெற்ற மற்றும், ஆசிரியர் தரங்களில் முதலாம், இரண்டாம் இடங்களைக் கொண்டுள்ள 'அனுபவம்' மிக்க 'ஆசிரியர்கள்'...? வந்து போனார்கள். இப்போது நானும் அவனும் மட்டும்தான்.

"சேர் எங்களுக்கு பாடம்" என் வகுப்பு மாணவத்தலைவன் வந்து நின்றான். அவனிடம் வேலை ஒன்றை பணித்து விட்டு இவனோடு நிற்க தீர்மானித்தேன். இப்போது அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான். கண்கள் நிறைய கண்ணீர். அவை வெளியே வருவதற்கான நிலையை அடைந்திருந்தன. அவனது தோளில் பரிவாக நான் கையை வைக்கவும் அவன் அழவும் சரியாக இருந்தது. "அப்பா குளத்தில் குளிக்கப்போய் செத்திட்டார்." நானும், தம்பியும், தங்கச்சியும் அம்மாவோட தான் இருக்கிறம்" ஒரே மூச்சாக கூறி முடித்தான். இப்போது அழுகை குறைந்து இருந்தது. "அப்ப நீங்க மூண்டு பேரும் மட்டும்தானா"? எனது கேள்வியின் ஆழத்தை உணர்ந்தானோ என்னவோ "சேர் அம்மாவுக்கு பேந்து புள்ள ஒண்டு பிறந்தது . அம்மாவ வீங்கி வரயிக்க நீங்க என்ன நடந்தது எண்டு கேட்டனிங்களெல்லே" நான் "ஓமோம் ஞாபகம் இருக்கு" என்றேன். "நான் உண்மையில சயிக்கிளில அடிபடயில்ல. அது அந்த மரத்திட மொத்த தடியால அம்மா அடிச்சவா." நீண்ட நாள் வராது சோதனை அன்று முகம் வீங்கியபடி, சொண்டு பிளந்து பேச முடியாதவனாக நின்ற அந்தக் காட்சி வந்து போனது. அந்த நேரம் அவனை நான் மிக உச்சக் கோபத்தோடு திட்டிய கடுஞ்சொற்களும் நெஞ்சை பிழியத் தொடங்கின.

இவைகளை உணர்ந்து கொள்ளாது "காலில் சப்பாத்து இல்லாமல் வருபவர்கள், புத்தகம் கொப்பிகளுக்கு ஒழுங்காக உறை



பேந்து முடிச்சவர்தான் அப்பா. ஆனா எனக்கு அவர அப்பா எண்டு கூப்பிட விருப்பம் இல்ல நாங்க அவர மாமா எண்டுதான் கூப்பிடுறனாங்க" என்றான்.

அம்மா, அப்பா, பிள்ளைகள் உறவுபற்றி பாடப்புத்தகங்களின் அழகியலுக்கும், இவனது உறவுமுறை யதார்த்தத்திற்கும் இடையில் இருக்கும் இடைவெளிகள் பற்றியும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் எப்போது எமது பாடப்பரப்புக்களில் வரப்போகிறன? எதை நாங்கள் சொல்லிக் கொடுக்கின்றோம்? கணிப்பீட்டு கலாச்சாரத்தால் உடைந்து போகும் இவன் போன்ற மாணவர்களுக்கு பரிகாரம் தேட முடியுமா....? கேள்விகள் எழுந்தன.

"அப்ப அண்டைக்கு றோட்டில விழுந்து கிடந்தது...." நான் கேட்பதற்குள் "ஓம் சேர் அது நான் தான்." "அண்டைக்கு நான் சாப்பிட்டது பாதி பணிஸ்தான்." "அம்மா ஒரே அடி" அம்மா முந்திமாதிரி எங்களில நேசம் இல்ல." மீண்டும் அழுகையோடு சொற்கள் வந்துகொண்டிருந்தன. "தண்ணி எடுக்காட்டி, வேலை செய்யாட்டி அடிப்பா." தாயின் அரவணைப்பும் அவளது தொடுகையும் எப்படி இவனுக்கு முள்ளாக மாறியது. இவன் எப்படி இவற்றை எல்லாம் தாங்கிக்கொள்வான். பள்ளிக்கூடம் வருவதில்லை, கணிப்பீடு செய்து கொண்டு வருவதில்லை, கோயிலுக்கு ஒழுங்கில்லை, துப்பரவு இல்லை என்பதற்காகவெல்லாம் எங்களால் எத்தனை தடைவை இவன் தண்டிக்கப்பட்டிருப்பான்? "அம்மா அடிக்கேக்க சரியா நோகுமாடா?" "சேர் போன ரேம் நான் சொண்டு உடைஞ்சு போடாதவர்கள், உரிய வேளைகளில் கட்டணங்களை கட்டாதவர்கள், தோய்க்காத ஆடை அணிந்து வருபவர்கள், உள்ளுடுப்புக்கள் ஏதுமின்றி சட்டைப்பின்னால் குத்தி இழுத்துக்கொண்டு வருபவர்கள் பின்னணியில் இருக்கும் கொடுமைகளை புரிந்து கொள்ளமுடியாத ஆசிரிய செயலமர்வுகளையும், பாடசாலை தரிசிப்புக்களையும் நினைத்துப் பார்த்தேன்.

"ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போகேக்க ஆரும் கேட்டா சயிக்கில்ல அடிபட்டதெண்டு சொல் எண்டு எனக்கு அம்மா சொன்னவா." பொய் சொல்வது பாவம் என்று நான் ஆரம்ப வகுப்புக்கு சமய பாடம் படிப்பிப்பது நினைவுக்கு வந்து போனது. "இரவில படுக்கேக்க தம்பிய கட்டிப்பிடிச்சுக் கொண்டுதான் படுப்பன். தங்கச்சியும் என்னோடதான் படுப்பா. அம்மா தன்ர அறையில் மாமாவோட படுப்பா. நாங்க வெளியிலதான் படுக்கிறனாங்க." நான் எதுவும் கேட்காமலேயே அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.


ஜோணுக்கு இலத்தீன் கற்பிக்க செல்கிற ஆசிரியருக்கு இலத்தீன் தெரிந்திருந் தால் மட்டும் போதாது. ஜோணையும் தெரிந்திருக்க வேண்டும் என்ற கூற்று தோற்றுப்போய் இவனது காலடியில் கிடப்பதை உணர்ந்தேன்.

என் கைகளிலும், பைல்களிலும் நாட்குறிப்புகளும், ஒப்படைகளும், கணிப்பீட்டு அறிக்கைகளும் இன்னும் சுற்று நிருபங்களும் கனக்கத் தொடங்கின. முதலாம் பாடம் முடிந்து மணி அடிக்கத் தொடங்கியது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு பச்சை மஞ்சள் கறுப்பு



'கணிப்பீடு' இச் சொல் கல்வி அதிகாரிகளின் ஆத்மார்த்த மொழியாகவும் ஆசிரியர்களுக்கும், அதிபர்மாருக்கும் வயிற்றில் புளியைக் கரைக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. மாணவர்களுக்கோ அது வெறுமனே 'கிழமைப்பரீட்சை' முறையாகவே இருக்கிறது. இலங்கையில் கல்வியியல் வரலாற்றில் கல்விச் சீர்திருத்தங்கள் காலத்துக்குக் காலம் மாற்றங்களுக்கு உள்ளாகி இருப்பதை காணலாம். மாற்ற நிலைகளுக்கு அடிப்படையாய் அமைவது 'அரசியல் கொந்தளிப்பு' நிலையே ஆகும். ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கங்கள் அரசியல் நெருக்கடிகளை சமாளிக்கக் கூடியவாறான கல்வியமைப்பை உருவாக்குகின்றன. இலங்கையிலும் இதன் அடிப்படையில் கல்விச் சீர்திருத்தங்கள் வந்து சென்று கொண்டிருக கின்றன. இன்று நடைமுறையிலிருக்கும் கல்விச்சீர்திருத்தம் தான் 'கணிப்பீடு' என்னும் அடைமொழியால் அழைக்கப்படுகின்ற கல்விச்சீர்திருத்தம் ஆகும். ஏனெனில் இச்சீர்திருத்தத்தின் அடியாக இருப்பது கணிப்பீட்டு முறையாகும். சரி விடயத்துக்கு வருவோம்.

இலங்கையில் இருக்கும் கல்வி முறையானது இலங்கையின் கல்வி முறையல்ல. அதாவது இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், பௌதீக சூழலுக்குப் பொருத்தமானதல்ல. இலங்கையில் தயாரிக்கப்படாத, கண்டுபிடிக்கப்படாத கல்விமுறை இது. கல்விமுறை மாத்திரமல்ல, இலங்கையில் நிறுவன அமைப்பான மத நிறுவனங்கள் உட்பட பல நிறுவனங்கள் ஐரோப்பிய சிந்தனைப் போக்கின் 'வளர்ப்புப்' பிள்ளைகளே.

காலனித்துவ காலத்து 'அரசபணியாளர் களை' உருவாக்கும் கல்வி முறைமையின் நீட்சியாக இலங்கையில் உருவாக்கப்படும் கல்வி மறுசீரமைப்புக்களை குறிப்பிட முடியும். இந்தவகையில் நடைமுறையிலிருக்கும் கல்வித்திட்டம் கூட முதலாம் உலக வளர்ச்சியடைந்த நாடொன்றில் இருந்து வாங்கப்பட்ட கல்விமுறையே.

இப்புதிய கல்வித்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சில விடயங்களை நோக்குவோம்.

- *பாடசாலைமட்டக் கணிப்பீடு.*
- *செயற்பாட்டு அறை ஒழுங்கமைப்பு.*
- *தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் சீர்மியம்.*
- *உளச்சார்புத் தேர்வு.*
- *பாடசாலை மீள் கட்டமைப்பு.*

இவற்றில் மிகப் பெரிய விடயமாக பேசப்பட்டும் இன்னும் தொடர்ந்து புகழ்ந்து எழுதப்பட்டும் கொண்டிருக்கும் விடயம் பாடசாலை மட்டக்கணிப்பீடு ஆகும்.

ஏற்கனவே நடைமுறையிலிருந்த மதிப்பீட்டு முறைகளுக்கு பதிலாக கணிப்பீட்டு முறை நடைமுறையில் இருந்து வருகிறது. இக்கணிப்பீட்டு முறை தொடங்கப்பட்ட இடமும் அதன் பரப்பும் வியாபகமும் இன்று எந்தளவில் இருக்கிறது? கணிப்பீட்டுமுறை கொண்டிருந்த விடயப்பரப்புக்கள் எந்தளவுக்கு நடைமுறையில் இருக்கின்றன? எவை உயிர்ப்புடன் இருக்கின்றன? அதன் ஆரம்பகால உள்ளடக்கத்துக்கும் இன்றைய நிலைக்குமான காரணங்கள் எவை? இக்கேள்விகள் கேட்கப்படாமலேயே இன்றுவரை 'கணிப்பீட்டை' பற்றி பந்திபந்தியாக பலர் எழுதிக் கொள்வதை நினைக்கும்போது வேதனையாக உள்ளது. கணிப்பீட்டு முறையின் தொடக்க காலத்தில் இருந்தவற்றை நோக்குவோம்.

***கணிப்பீட்டுத் தடவைகள் - குறைந்தது12 முனைவு வரை. (polograph)***
***கணிப்பீட்டு அடைவுகள்- பிறிஸ்ரல் போட்டில் பெயர் குத்தப்பட்டு தொங்கவிடல்.***
***மாணவர் தோற்றப்பாட்டு வரைபு.***
***மாணவர்கள் பண்பு சார் அவதானிப்புக்கள். -(25 பண்புகள்)***
***கணிப்பீட்டுக் கருவிகள்.***
***கணிப்பீட்டுக் கருவிகள்***

இவை தொடர்பான அறிக்கையின் விபரங்கள், ஆசிரியர், அதிபர் மற்றும் மாணவர்களிடம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. மாணவர்களின் பயிற்சிக் கொப்பியின் பின்புறம் மாணவரின் தோற்றப்பாடு வரையப்படல் வேண்டும். அது ஒவ்வொரு கணிப்பீட்டு சந்தர்ப்பத்திற்கும் பெற்றோரிடம் காட்டி கையொப்பம் இடப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டது.

நிறங்கள் பற்றிய விளக்கங்கள், செயலமர்வுகள் வருடக் கணக்காக நடைபெற்றன. சிவப்பு, பச்சை, மஞ்சள், கறுப்பு இவைபற்றிய விளக்கங்களும் உளவியல் வியாக்கியானங்களும்; ஒவ்வொரு நிறத்துக்கும் ஒவ்வொரு செயலமர்வு கணிப்பீடு தொடர்பாக செயலமர்வு நடத்தும் 'அதிகாரிகள்தான்' அன்று இராஜாக்கள். ஆனால் இவற்றில் எவை நடைமுறையில் இருக்கின்றன? கணிப்பீட்டு தடவைகள் ஐந்தாக குறைக்கப்பட்டுவிட்டன. ஏன் குறைக்கப்பட்டன? 10க்கு குறையாமல் கணிப்பீடு இருக்கக் கூடாது. பத்தாவது இருக்க வேண்டுமென கங்கணம் கட்டி இதை ஐந்தாக குறைத்ததை விளக்குவார்களா?

'முனைவு வரைவு' என்னும் வரைவு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வரையும் வரைபு. இன்று ஏன் இல்லாமல் போனது? எல்லாப் பாடத்துக்குமான கணிப்பீட்டு அடைவுகள் பொக்ஸ் போட்டில் குறிக்கப்பட்டு வர்ணம் ஒட்டி காட்சிப்படுத்தல் ஏன் இல்லாமல் போய்விட்டது? புதிய கணிப்பீட்டு அறிக்கையில் கூட இது இல்லையே ஏன்? புள்ளிகள் மனதை பாதிக்கும், ஆளுமையை சிதைக்கும் என காலங்காலமாக வைக்கப்பட்ட செயலமர்வு களின் நோக்கம் என்ன? மாணவர் தோற்றப்பாடு என்பது நிலைக்குத்து அச்சில் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களையும் கொண்டு வரையப்படுவது. இது கணிப்பீட்டு அறிக்கையிலும் மாணவர்களின் கொப்பிகளின் பின் புறத்திலும் அவசியம் வரையப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால் இன்று நடைமுறையில் இல்லையே? இது ஏன் இடையில் இல்லாமல் போனது?

***மாணவர்களின் பண்புகளை அளவிடும் முறை முன்பு நடைமுறையில் இருந்தது. இது ஆரம்பத்தில் இருபத்தைந்தாக இருந்தது. இம்முறை அவதானிப்புக்கள் இல்லை. புதிய மாற்றத்துக்கான கல்விக் கோட்பாட்டில் ஒழுக்கத்தை கட்டியெழுப்பல் முக்கியமானதாக இது முன்வைக்கப்பட்டது. இன்று இது கைவிடப்பட்டுள்ளது. மாணவர் களை பண்புள்ளவர்களாக மாற்றவேண்டிய பொறுப்பு சலிப்படைந்து விட்டதா? அல்லது அவதானிப்புகளால், குறியீடுகளால் பண்பை வளர்க்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டார்களா?***

இன்று கணிப்பீட்டு அறிக்கைகள் புள்ளிகளை மட்டும் கொண்டிருக்கும் சாதாரண மதிப்பீட்டு அறிக்கையாக மாறியுள்ளது. இதில் மாணவர்கள் தவணை ஒன்றில் நடத்தப்பட்ட கணிப்பீட்டு தடவைகள் மற்றும் தவணையில் பெற்ற புள்ளிகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன.

**மீண்டும் பழைய நிலைக்கு கணிப்பீடு இறங்கி வந்துள்ளது. இதற்கான காரணங்கள் எவை? என்ற விமர்சனரீதியான மாற்றுக் கருத்துக்கள் இதுவரை எழவில்லை, முன்வைக்கப்படவில்லை. ஆனால் இன்று வரை கணிப்பீட்டைப்பற்றியே எழுதிக் குவிக்கும் கல்வியியலாளர்கள்...? பற்றி எதைக் கூறுவது.**

கணிப்பீட்டு முறையானது உண்மையில் கற்கும் ஒருவர் தமது திறமைக்கும், திறன்களுக்கும் ஏற்ப போட்டியின்றி ஒரு துறையை தெரிந்து கொண்டு தம்மை வளர்த்துக்கொள்ளக்கூடிய ஒரு நாட்டுக்கே பொருந்தும். அதை விடுத்து பாலர் வகுப்பு அனுமதியில் இருந்து பல்கலைக்கழக அனுமதி வரை மற்றும் அனைத்து தொழில் தெரிவுகளுக்கும் புள்ளிகளைக் கொண்டு தெரியும் போட்டி முறைத் தெரிவு இருக்கும் வரை கணிப்பீடு என்ன எவையும் செல்லு படியற்றவையே.

***புள்ளிகள் தான் இலங்கையில் கல்விக் கோட்பாட்டின் அடித்தளம். புள்ளிகள் கல்விப்போக்கை நிர்ணயிக்கும் வரை கணிப்பீடு வெறும் பரீட்சார்த்த முயற்சியே.■***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த வயசு

**இளமையை வணங்கி உன்னுடன் என் தொடர்பாடலை ஆரம்பிக்க விரும்புகிறேன்.**
**நலமா நண்பனே. திறந்த மனதுடன் நாம் உரையாடலாம். இது உனதும் எனதுமான பக்கம். நம்மை நாம் அறிவதற்கும், பகிர்வதற்கும் "இந்த வயசு" பொருத்தம்தானே....**

*__வா__ழ்க்கையின் உன்னதமான பருவம் இளமை என்பதை நீயும் மறுக்க மாட்டாய்; யாரும் மறுக்க மாட்டார்கள். இலட்சியங்களுக்காக வாழ்வது, நட்புக்காக எதையும் செய்வது,* **வீரம், தியாகம், துடிப்பு, துணிவு, பலம்** *இவையெல்லாம் இளமையின் அணிகலன்கள்.*

*இளமையின் சக்தியை பலர் காட்டாற்று வெள்ளத்துக்கு ஒப்பிடுவார்கள். பொங்கிவரும் அந்தச் சக்தியை சீராக நெறிப்படுத்தினால் எத்தனையோ பலன்களை விளைவிக்கும். அதேவேளை கட்டற்று பெருகினாலோ அதனால் ஏற்படக் கூடிய அழிவுகளை சொல்லி விளக்க முடியாது.*

*உன் இளமையை நீ எப்படி பயன்படுத்துகிறாய்? புறத்தே இருந்துவரும் கட்டுப்பாடுகள் எதையும் இளமை நொடியில் உடைத்தெறியும். அம்மா சொல்வது, அப்பா சத்தம் போடுவது, ஆசிரியர் திட்டுவது எல்லாம் உனக்கு நாராசமாகவே இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் தடுப்பதனாலேயே எதிர்த்துச் செயற்பட உனது இளமை தினவெடுக்கும். நான் வெளியே இருந்து வரும் கட்டுப்பாடுகளைப் பற்றிப் பேசவில்லை.*

*உனக்கென்று நீ சில வரன்முறைகளை வைத்திருக்கிறாயா? இப்படி வாழ்வது தான் வாழ்வாங்கு வாழ்தல் என்ற ஒரு தெளிவு உன்னிடம் தோன்றியிருக்கிறதா? அல்லது உனது இளமை கட்டற்ற காட்டாறு தானா? அப்படியானால் அது உன்னையும் என்னையும் ஏன் எல்லாவற்றையுமே அழிக்கும் அழிவுச் சக்தியாக மாறப் போகிறது என்பதை நினைத்துக் கொள்.*

**"இந்த வயதில் அனுபவிக்காமல் எந்த வயதில் அனுபவிப்பது" இவ்வாறு பல இளையோர்கள் சொல்கிறார்கள். எந்த வயதிலும் அந்த வயதுக்குரிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியம்.**

*கிட்டிப்புள் விளையாடி, பட்டம்விட்டு, எட்டுக்கோடு விளையாடி, கெந்தியடித்து வெயிலுக்கும் மழைக்கும் வேறுபாடின்றித் திரிந்து அடிவாங்கி அழுது கழியாத சிறுபருவத்தையிட்டு எண்ணி மகிழ என்ன இருக்கப்போகிறது?*

*அதுபோலவே ஒத்த வயதினராய் கூடிக்கதைத்து, கேலிபண்ணிச் சிரித்து, திட்டமிட்டு சமூகப்பணிகள் இணைந்து செய்து, கழகங்கள் உருவாக்கி விளையாட்டில் சாதனைகள் படைத்து, சங்கங்கள் அமைத்து கலைநிகழ்வுகள் நடாத்தி, இலட்சியங்களை வரிந்து இலக்குகளை உருவாக்கி அவற்றை அடைவதிலே மகிழ்ந்து பலரும் பாராட்ட பெருமை கொண்டு கடந்து போகாத இளமைப் பருவத்தில் எண்ணி மகிழ்வதற்கு என்ன இருக்கப் போகிறது? ஆனால் இந்த வயதில் அனுபவிக்காமல் எந்த வயதில் அனுபவிக்கிறது என்பதன் மூலம் நீங்கள் குறிப்பிடுவது எப்பருவத்துக்குமே ஒவ்வாத போதைப் பாவனையாகவோ அல்லது முதிர் பருவத்துக்குரிய பாலியல் அனுபவமாகவோ இருக்குமென்று சொன்னால் அது பரிதாபத்துக்குரிய நிலைதான். ஏனெனில் நீங்கள் உண்மையில் இளமையை அனுபவிக்காமல் முதுமைக்குள் கடந்து செல்கிறீர்கள்.*

*உன்னதமான ஒரு வாழ்க்கைப் பருவத்தை அனுபவிக்காமலே கடந்து போவது எவ்வளவு கவலைக்குரியது என்பதை தயவுசெய்து எண்ணிப் பாருங்கள்.*

*இளமைப்பருவம் ஒரு குழப்பம் நிறைந்த பருவம் என்பதையும் நானறிவேன். வாழ்வு பற்றி, வாழ வேண்டிய முறைபற்றி, உடல்பற்றி, உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி, உறவுகள் பற்றி, குறிப்பாக எதிர்பாலாருடனான உறவுபற்றி என பல கேள்ளிகள் உன்னிடம் இருக்கலாம். இவை பற்றிய தெளிவுகள் உன் இளமையை நன்கு அனுபவிக்க துணைசெய்யும் என்ற வகையில் அவற்றுக்கும் விடையளிக்க ஆவலோடு உள்ளேன். வினாக்களை ஆத்மா முகவரிக்கு எழுதி அனுப்புங்கள் எனது கருத்துக்களோடு மறு இதழில் சந்திக்கிறேன்.* ■


நட்புடன் சந்திரன்

**உன்னை**
**நம்ப வேண்டுமென**
**நான் சொல்லவில்லை**
**ஏனெனில்**
**எனது வார்த்தைகள்**
**உன் சொந்த எண்ணங்களன்றி**
**ஒன்றுமில்லை**
**எனது செயல்கள்**
**செயல் நிலையில் உள்ள**
**உனது சொந்த**
**நம்பிக்கைகளன்றி**
**ஒன்றுமில்லை**

——— கலீல் ஜிப்ரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கட்டமைப்பு என்ற மாயமானும் சுனாமிப் புத்தர் சிலையும்



அரசியல் ஆய்வாளர்கள் அடிப்படை வாதத்தை உலகளாவிய அரசியல் கருதுகோளாகவே புரிந்துள்ளனர். நிறுவனமாக்கப்பட்ட மத அமைப்புகளில், அதுவும் சாதி வன்முறை அதிகாரமயப்பட்ட சூழலில் வெகுஜன மதம் சமூகவியல் ரீதியில் மதக் குழுமத்தின் தாழ்வுணர்வுச் சிக்கலையும் எதிர்காலத்தைப்பற்றிய பயவுணர்வால் மதரீதியான அடிப்படை வாதத்துள் ஒழிந்துகொள்ளும் போக்கு வெளிப்படுத்துகிறது. அடிப்டைவாதத்தை ஒரு முழுமையானதும் ஆழமானதுமான உணர்ச்சிபூர்வமான மதக் கொள்கையாகவே குறிப்பிடவேண்டும். இன்று அரசியல், மத சமூகவியல் வாழ்வு நிலைப்பாட்டை பெருமெடுப்பில் குறிக்கின்றது.

## அடிப்படைவாதிகளின் இயல்பு

பல சூழ்முறைகளோடு ஒப்பிடுவதால் இக் கருதுகோளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். இவ் அடிப்படைவாதிகள் பற்றிய அவதானிப்புகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

*அடிப்படைவாதிகள் ஒரு வகையில் தம்மை சமூகத்தில் அதிகாரமுடையவர்களாகவே கருதுவர் இவர்கள் எண்ணிக்கையில் அதிகம் இருந்தாலும் தம்மை சிறுபான்மையினராகவே கருதுவர்.*

*மற்றைய மதத்தினரையோ, மற்றைய ஆன்மீக அனுபவங்களையோ மனிதத்தையோ, சமூகதத்தின் சட்டவரம்பையோ மதிக்காத போக்கைக் கொண்டிருப்பர்.*

*இவர்கள் எவ்வித வன்முறையான எதிர்ப்புக்கும் தயங்கமாட்டார்கள்.*

## அடிப்படைவாதம் உலகளாவிய கருதுகோளாகும்

பனிப்போருக்குப்பின் அமெரிக்க எதிர்ப்பு கொம்யூனிசத்திலிருந்து இசுலாமிய அடிப்படைவாதமாக மாற்றம் பெற்றுள்ளது. இந்து அமைப்புகளும் பாபர் மசூதி உடைப்பு, குஜராத் மதக்கலவரம், இந்திய அரசியலில் பா.ஜ.க. மேலாண்மை இப்பரிமாணத்தை இந்திய துணைக்கண்டத்தில் யதார்த்தமாககியுள்ளது. சிறுபான்மையினரை குரான் அவமதிப்பு என்ற பெயரால் கல்லால் எறிந்து கொல்லல் சரியான சட்டம். முல்லாக்கள் திபான்கள் ஆட்சியைக் கட்டுப்படுத்தல் சுலாமிய மதஅடிப்படைவாதமாகவே பார்க்கவேண்டும். எல்லா மதங்களிலும் ரசியல் குழுக்களிலும் பண்பாட்டு இயக்கங்களிலும் இப்போக்கு கடுமையாக உள்ளதை அவதானிக்கலாம். இன்று மத அடிப்படைவாதம் அரசியல் அதிகாரத்தை நிலைப்படுத்த போர்த்தப்படும் போர்வை எனக் கூறலாம்.

## மக்வோல்ட் ஷிகாட் யுத்தம்

ஐரோப்பிய நவீனத்துவத்தின் பாய்ச்சல் மத மேலாண்மையை இல்லாமாக்கியது. என்றாலும் மதரீதியான அடிப்படைவாதம் 20ம் நூற்றாண்டின் இறுதியில் மேலாண்மை பெறத்தொடங்கியது. மூன்றாம் உலக நாடுகளின் சமூக அமைப்பில் மதம் தவிர்க்கமுடியாத ஒன்றானாலும் அமெரிக்க அரசியலில் கிறிஸ்தவ அடிப்படைவாதம் பலமிக்க அரசியல் சக்தி எனலாம். இன்றும் கூட ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற இஸ்லாமிய நாடுகளில் அமெரிக்காவும் சில மேற்கத்தைய சார்பு நாடுகளும் மேற்கொண்ட போரை மத்திய காலத்தில் இடம்பெற்ற சிலுவைப் போர் என ஊடகங்கள் சில மேற்கோள் காட்டியபோதிலும் இப்போர் ஒரு அடிப்படைவாதிகளின் போர் என்பதே சரியான கருத்தாகும். இதை ஊடகங்கள் பல **மக்வோல்ட் ஹிகாட் யுத்தம்** என்றே வர்ணித்திருக்கின்றன. இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின் அமெரிக்க தலைவர் இளையவர் சொன்ன பழிவாங்கல் என்ற வார்த்தைப் பிரயோகம் கிறிஸ்தவ அடிப்படைவாதத்தின் மொழிதான் என்பதை மக்கள் அவதானித்துக் கொண்டார்கள்.

## சிங்கள பௌத்த மேலாண்மை

குளம், தாதுபோபுரம் இரண்டையும் அணுகியே சிங்கள பண்பாட்டை விளங்கிக் கொள்ளலாம். இலங்கைத் தீவிலும் அரசுகளும், பின்னர் அரசியல்வாதிகளும் இவ்விரண்டையும் அணுகியே தமது மேலாண்மையை தக்கவைத்துக்கொண்டனர். இலங்கையின் பல கிராமங்களில் பௌத்த மடாலயங்கள் நிலமானிய முறையை கட்டுப்படுத்துவதால் இலங்கை அரசியலில் எல்லா அரசியல்வாதிகளும் சிங்கள பௌத்தத்தை முதன்மைப்படுத்திய அரசியல் நடத்தவேண்டும். தங்களது ஈரவலயக் காணிகளை காணியில்லாத சிங்களவரிடமிருந்து பேணிக்கொண்டு உலர் வலய காணி அபிவிருத்தியை முன்வைத்ததும் அதைத் தக்கவைத்ததும் சிங்கள பௌத்தின் கபட நோக்கமாகும். அரச மரம், பக்கச்சார்பான தொல்லியல் ஆய்வுகள், அபிவிருத்தி நிதிகள் இக்கபட நோக்கத்துடன் மேலாண்மையைப் பேணப் பாவிக்கப்பட்டதாகும்.

## சிங்களம் மட்டும்

எல்லா அரசியல் வாதிகளும் பௌத்த மேலாண்மையை பேணிய போதிலும் பஞ்ச பலவேகய எனும் இச் சமூகவியல் கலவையை தனது அரசியல் முனைப்புக்கு நன்றாகவே பாவித்துக் கொண்டவர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்க. அங்கிலிக்கன் மதப் பின்னணியையும் ஆங்கில பாசத்தையும் தூக்கியெறிந்துவிட்டு பௌத்த மறுபிறப்பை தனது அரசியலுக்காக மேற்கொண்டவர். அதே காலகட்டத்தில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமவரை காத்திருக்கும் கொக்குபோல தனது சீர்திருத்த வாத கிறிஸ்தவ மதப் பின்னணியையும் உதறியெறிந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன் பின் தனது ஆட்சி அதிகார வரம்பின் மேலாண்மைக் கட்டத்தில் ஒரு பௌத்த பிக்குவின் (பன) பிரசங்கம்போல தன் அரசியல் பேச்சுக்களை இனவெறியையும் கையாண்டு தம்மிஸ்டம் போல் பேசினார்.

சாதி வன்முறையை அங்கீகரித்த சமூக அமைப்பில் ஆங்கிலபாசம் யதார்தமானது. பௌத்த முதன்மை, சிங்களம் மட்டும் சட்டவாக்கம், பாடசாலைகள் அரசுடமை, பௌத்த ஜயந்தி, போயா விடுமுறை, பின்ன ஜே. ஆரின் தர்மிஸ்ட, ஏர்பூட்டு விழா (வப்மகுழ) அனைத்தும் அரசியல் மயப் படுத்தப்பட்ட பௌத்த சிங்கள அடிப்படை வாதத்தின் பிரதிபலிப்பு எனலாம்.

## இராமஞ நிக்காய

பௌத்த தேரோக்களை அவதானிக்கும் போது அவர்கள் காவியுடை அணித்திருக்கும் முறை அவர்கள் சாந்திருக்கும் நிக்காயாவைப் புலப்படுத்தும்.


(தொடர்ச்சி பக். 12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகர்க்கும் இடைவெளி



## கலைக்காற்று




*ஒரு நண்பரின் மனைவி.*

பெரும் பதவியில் உள்ள நண்பர் ஒருவரின் மனைவி நடிகர் ஒருவரின் தீவிர ரசிகை. அந்த நடிகரின் வயது ஏறக்குறைய ஐம்பது இருக்கும். திரையுலகில் கம்பீரமான, கட்டுப்பாடான அதிகாரி, ஆச்சாரமான பிராமணர், கரைகடந்த சங்கீத வித்துவான், பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கும் உத்தமர் போன்ற வேடங்களிலேயே நடித்து வந்தவர். நண்பரின் மனைவியின் நச்சரிப்பின்பேரில் வாய்ப்பொன்று வந்தபோது நடிகரை விருந்துக்கு அழைத்திருந்தார். நண்பரின் மனைவிக்கோ மிகுந்த பரவசம், தாம் மதித்துப் போற்றும் ஒரு இலட்சிய மனிதர் தம் வீட்டுக்கு வருவது குறித்து. ஏற்பாடுகளைத் தடல்புடல் பண்ணியிருந்தார். நடிகரும் வந்தார். பேசிக்கொண்டிருக்கிறார்கள். நண்பர் புகைக்கும் வழக்கம் உள்ளவர் என்பதால் சிகரட் ஒன்றை எடுத்து மரபுக்காக நடிகரிடம் நீட்டினார். நடிகரும் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். அருகில் இருந்த மனைவிக்கோ இவர் சிகரட் பிடிப்பாரா என்ற ஆச்சரியம்.

உணவு உண்ணச் செல்ல எழுந்தபோது நண்பர் 'How about a drink?' என்று வினவவும் நடிகர் சம்மதிக்க இருவரும் மது அருந்தத் தொடங்கினார்கள். நண்பரின் மனைவியோ அதிர்ச்சியில் உறைந்து போனார். தன் கணவர் மது அருந்துவதை ஜீரணித்துக் கொண்ட அவரால் உத்தம மனிதராகத் தான் கற்பனை செய்து வைத்திருந்த நடிகர் மது அருந்தியதை ஏற்றுக் கொள்ள இயலாமல் அழத் தொடங்கினார். இந்த உண்மைக் கதையை இங்கே நிறுத்திக் கொள்ளலாம்.

**நன்கு படித்த, நல்ல அந்தஸ்தில் உள்ள அப்பெண்மணி ஏன் அழுதார்? நேரில் பார்த்திராத ஒரு நடிகரின் மீது இத்தகைய அபிப்பிராயங்களை எப்படி அவராகவே உருவாக்கிக்கொண்டார்?**

**நடிகருடைய கதாபாத்திரங்களை அவரின் நிஜ வாழ்க்கையாக நம்புவதற்கு அவரை நிர்ப்பந்தப் படுத்தியது எது?**

தொலைக்காட்சிகளில் கணவன், மனைவியைப் பேட்டி காணும் பேட்டியாளர் 'உங்களுக்குப் பிடித்த கதாநாயகி யார்?' என்று கணவனிடமும், 'உங்களுக்குப் பிடித்த கதாநாயகன் யார்?' என்று மனைவியிடமும் கேட்க இருவரும் எவ்விதத் தயக்கமுமில்லாமல் 'ஜோதிகா' என்றோ 'அஜித' என்றோ கூறுகின்றனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இத்தகைய கேள்விகளும், பதில்களும் சாத்தியம்தானா? ஐம்பது ஆண்டுகளில் நடிகர், நடிகைகள் நம் வாழ்வின் அங்கமாகிவிட்டது எங்ஙனம்? உணர்வு பூர்வமான நெருக்கத்துக்குரியவர்களாக எப்படி ஆனார்கள்? இந்த விந்தை எவ்வாறு நிகழ்கிறது?

சினிமா நடிகர்களும், நடிகைகளும் நம் வாழ்வில் நெருக்கமான அங்கம் வகிப்பதேன்? இவ்வினாவிற்கு பல விடைகள் இருப்பினும் க்ளோசப் என்னும் மந்திரம் இதில் பெரும்பங்கு வகிப்பதை யாரும் மறுக்க முடியாது.

நம் நடைமுறை வாழ்வில் நாம் இரத்த உறவுடைய அம்மா, அப்பா, கணவன், மனைவி, சகோதரன் போன்றவர்களைவிட நெருக்கத்தில் கமல்ஹாசனையும், சிம்ரனையும் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். சிம்ரனின் உதட்டு மச்சமும், கமலின் புருவ அமைப்பும் நம் தாய் / மனைவியுடைய முகத்தோற்ற நுணுக்கங்களைவிட நமக்கு நன்கு பரிச்சயமானதாக ஆகிவிடுகிறது.

வயது வந்த மகனும் தாயும் ஆசிரியரும் மாணவனும், கடைக்காரரும் நுகர்வோரும் புழங்கும் 'வெளி' (Space) ஒன்று உண்டு. ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய தனிப்பட்ட வெளிக்குள் (Personal space) பிரத்தியேகமானவர்களை மட்டுமே அனுமதிக்க இயலும். ஆனால் திரைப்பட க்ளோசப்புக்கள் நம்மை அனுமதித்துத் திணித்துவிடுகின்றன. அதனால்தானோ என்னவோ நாம் நடிகர், நடிகைளோடு உணர்வு பூர்வமான நெருக்கத்தை உணரத் தொடங்குகின்றோம்.

இரத்த உறவுடைய அம்மா, அப்பா, கணவன், மனைவி, சகோதரன் போன்றவர்களைவிட நெருக்கத்தில் கமல்ஹாசனையும், சிம்ரனையும் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். சிம்ரனின் உதட்டு மச்சமும், கமலின் புருவ அமைப்பும் நம் தாய் / மனைவியுடைய முகத்தோற்ற நுணுக்கங்களைவிட நமக்கு நன்கு பரிச்சயமானதாக ஆகிவிடுகிறது.

### க்ளோசப் எனும் அற்புதம்

ஒரு சாதாரண பார்வையாளனை "நீ ஏன் சினிமாவை விரும்புகிறாய்" என்று கேட்டால், சர்வசாதாரணமாக அவன் சொல்லும் பதில் "சினிமா அப்படியே கண்முன்னால் நடப்பதைப் போன்று உள்ளது" என்பான். ஆனால் உண்மை இதற்கு நேர் எதிரானதுதான். நம்முடைய கண்கள் எதையுமே செவ்வக அடைப்புக்குறிக்குள் பார்ப்பதில்லை. ஒரு அரைவட்ட அளவுக்குள் எல்லாவற்றையும், தேவையெனில் அதற்குள் தேர்ந்தெடுத்த பகுதிகளையும் நம் கண்முன்னால் பார்க்க முடியும்.

*சினிமாவின் செயற்கைத் தனத்திற்கு க்ளோஸ் - அப் ஒரு நல்ல உதாரணமாக அமையும். நாம் எவ்வளவு விரும்பினாலும் நமது அண்டை வீட்டுப் பெண்ணை சினிமா காட்டுகிற அருகாமையில் பார்க்க முடியாது. அதேபோல் கைகள், கால்கள், தொப்புள், விரல்கள், உதடுகள், காதுதுளி என்று துண்டிக்கப்பட்ட பிம்பங்களைப் பார்த்தலும் இயலாது.*

இயற்கையான காணும் திறனுக்கு முரணான இந்த க்ளோஸ் - அப் எனும் அபத்தம்தான் திரைப்படக் கலையின் அற்புதமான உத்தியாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைமாறும் வெண்கொக்குகள்

"அண்ணா. டேய் மாமா மோட்டச் சைக்கிள் கொண்டு வந்திட்டார் வா ஓடுவம்" "புர்.......புர்......புர்........புர்.........."

"தம்பி டேய் மோட்டச் சைக்கிலுக்கு பெற்றோல் முடிஞ்சுது. இந்தா காசு போய் வேண்டியா" "அண்ணா டேய் கடக்காரன் மிச்சக்காசு தர மாட்டானாம்" சேட் கொலருக்குள் கையை நுளைத்து வெளியே கையை எடுத்தபடி "தம்பி டேய் இந்தா கத்தி கடக்காரனை வெட்டிப்போட்டுவா"...... இந்த நிகழ்வை இரண்டு குழந்தைகள் நடித்தார்கள். (யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை) இதனை ஒரு முறை நீங்கள் காட்சிப்படுத்திப்பாருங்கள். இத்தனைக்கும் அவர்களின் வயது என்ன தெரியுமா? ஒருவனுக்கு வயது ஐந்து, அடுத்தவனுக்கு வயது ஆறு. "வளரும் பயிரை முளையிலே தெரியும்". இந்தப் பிஞ்சு மனசில "வன்முறை" நஞ்சை ஊற்றியது யார்? யார் மீது குற்றம்? கடைகளில் விற்கும் பிளாஸ்ரிக் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு "ஆமியும் இயக்கமும் விளையாடுவமே". மனங்களில் பதிந்துள்ள விளையாட்டை எப்படி அழைப்பது.

குட்டி வீடு கட்டுவதையும் கூட்டாஞ் சோறு ஆக்குவதையும், பேரன் பேத்திகள் சூழ இருந்து "கதை சொல்லுங்கோ, பாட்டுப் பாடுங்கோ" என்று கேட்பதையும் இப்போது நாம் எந்த வீட்டிலும் காண முடிவதில்லை. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு மிக தூரத்தில் போய் விட்ட நிலையில் அவ் இடைவெளியை நிரப்பும் நிரப்பிகளாக வன்முறை சார் பொழுதுபோக்குகள் காணப்படுகின்றன.

9ம் ஆண்டு மாணவன் பட்டப்பகலில் கையில் கோல்ட்லீவ் புகைத்துக்கொண்டு என்னைக் கடந்து சென்றான். மனம் பதை பதைத்தது. "தம்பி முடிவெடுக்கிறது உனக்குள்ள உரிமைராசா. ஆனா இந்த வயசில இப்பிடி குடிக்கிறதுக்கு ஏதும் காரணம் இருக்கா அப்பன்." "சேர் ஒரு நாளைக்கு பத்துப்பதினைஞ்சு குடிப்பன்." பால் மணம் மாறாத முகம் இவனா.....? " அப்பாட்ட இருக்கிற கெட்ட பழக்கங்களில என்னட்ட இருப்பது இது ஒண்டுதான்."

அண்மையில் பாடசாலை மாணவர்கள் கூட்டமாக சேர்ந்து நீலப்படம் பார்த்ததாக தகவல்கள் வருகின்றன. அதேவேளை அவர்கள் தொடர்பாக பாடசாலை இறுக்கமான நடவடிக்கையை எடுத்துள்ளதாக அறியமுடிகிறது. இது தொடர்பாக பிரபலமான தனியார் பாடசாலை மாணவன் ஒருவரிடம் உரையாடியபோது "பி.எப் பாக்கிற ஆக்கள நிப்பாட்டுறது எண்டா யாழ்ப்பாணத்தில எத்தின பேர நிப்பாட்ட வேணும் பிடிபடுறதுகள் பாவம்" என்றான்.

தெ.தர்ஸணன், கல்வியங்காடு

# பிள்ளையும் தொட்டிலும்

யாழ்ப்பாணத்தில் கல்வி கீழ்இறங்கி போவதைக் குறித்து மற்றும் போர்க்காலங்களில் விடுபட்ட கல்வி தொடர்பாக யாழ் செயலகத்தில் சம்பந்தப்பட்ட கல்வியியலாளர்கள், அரசஅதிகாரிகள், கல்விப் பணிப்பாளர் போன்றோர் ஒன்றுகூடி பேசியுள்ளனர். யாழ்ப்பாணம் பிரதேசம் முழுவதும் கல்வியில் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாக கூறியுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்தில் கல்வி பின்னடைவதற்கான காரணம் தெளிவாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா? யுத்தம், அடக்குமுறை என்று கோரஸ் பாடிக்கொண்டிருக்கிறோமா? யாழ்ப்பாணத்தில் இன்று பெருகிவரும் வீடியோ கலாசாரம் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக குருநகர் கடற்கரை வீதியில் 400 மீற்றர் இடைவெளியில் குறைந்தது 10 வீடியோ கடைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் குறைந்தது 100 படப் பிரதிகள் வாடகைக்கு விடப்படுகின்றன. இது ஒருபுறம். மறுபுறம் சக்தி தொலைக்காட்சி சேவை.

இன்னுமொரு புதிய செயல்முறையாக கேபிள் வழியான இணைப்பு சேவை. இது பல இடங்களில் இருந்து வழங்கப்படுகின்றது. இச்சேவை மூலமாக குறைந்தது 14 சனல்கள் இணைப்பு கிடைக்கின்றது. இதில் கே. ரி.வி எனும் அலைவரிசையில் காலை .7.30 தொடக்கம் மாலை 11.30 வரை திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. விளம்பரம் அல்லது செய்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும்போது அடுத்த அலைவரிசைக்கு மாற்றி இன்னுமொரு படத்தைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. றிமோட் மூலமாக விரும்பிய சனல்களில் 24 மணி நேரமும் மாற்றி மாற்றி திரைப்படத்தைப் பார்க்கும் வாய்ப்பை நமது கல்விச் சமூகம் வழங்கியுள்ளது.

இவைகள் ஏன் விமர்சனத்துக்கு உள்ளாகவில்லை? இவைகளுக்கென சங்கம் அமைக்க அனுமதி கொடுப்போர் யார்? தனிப்பட்ட ரீதியில் சற்றலைட் அன்ரனா வசதியுடன் இவ்வாறு சேவை வழங்க அனுமதி அளித்தது யார்? அரச அமைப்புக்கள், ரெலிகொம் மற்றும் மாநகரசபை மின்கம்பியைப் பயன்படுத்தி யாழ் யுவானியார் ஆலயச் சூழலில் இருந்து கரையோரம் முழுவதும் குறைந்தது 300 அங்கத்தவர்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ள கேபிள் சேவை 'சம்பந்தப்பட்டவர்களின்' ...? கவனத்திற்கு செல்லாமல் விட்டிருக்குமோ? ஆர்ப்பாட்டம், பேரணி, கறுப்புத் தினம் என்று வீதிக்கு இறங்குபவர்கள் சமூகவிடுதலைக்கும் சமூக சீரழிவுகளுக்கும் எதிராக ஏன் குரல் கொடுப்பதில்லை.? ஆசிரிய சமூகம், அதிபர் சமூகம், கல்வியியலாளர் சமூகம், சங்கங்கள் ஏன் இவற்றை தவறாகப் பார்க்கவில்லை?

"பிள்ளையைக் கிள்ளி தொட்டிலை ஆட்டும்" புத்திஜீவி சமூகம் இருக்கும் வரை சமூகமாற்றம் என்பது கானல் நீர்தான். சனம் பாவம்.

சாதுப்பிரியன், யாழ்ப்பாணம்

# ஒன்று நாலானது

யாழ்ப்பாணம் இலஞ்சம், ஊழல் போன்றவற்றின் தலைநகராயிருக்கிறது. இதை ஏற்றுக் கொள்வது இப்போது ஒரு கடினமான விடயமில்லை. கல்வி அமைப்புக்கள் தொடக்கம் சமய நிறுவனங்கள் வரை எங்கும் இது தனது ஆதிக்கத்தை பரப்பியுள்ளது. விடயம் இதுதான். அவர் அந்தக் கிராமத்துக் கோவிலின் பொறுப்பானவர். அவரிடம் ஒரு அரசஅமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மழைநீரை தேக்கிவைக்கும் தாங்கி ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி கேட்டுள்ளார். அவர் அனுமதி வழங்குவதற்கு முன்பு அத்திட்டம் தொடர்பான கணக்கு அறிக்கையை கேட்டிருக்கிறார். வந்த அதிகாரிக்கு இது வித்தியாசமாய் போய்விட, அவர் தாம் வழமையாக கட்டுவதுதான் வேலை என்றும் இவ்வாறு அறிக்கை காட்டுவது கிடையாது என்றும் கூறியதோடு மட்டுமல்லாது அப்படியாயின் இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றப் போவதாகவும் கணக்குவிட அவரோ நாங்கள் உம்மிடம் வந்து கேட்கவில்லை நீர்தான் வலிய வந்து இங்கே செய்யப்போவதாக கேட்டீர். ஆகவே இத்திட்டம் இங்கேதான் செய்யப்படவேண்டும் என்று விடாப்பிடியாக நின்றுவிட்டார்.முடியாது என்று சொல்லிச் சென்ற அவர் சிலநாட்களின் பின் திரும்பி வந்து நீர்சேமிப்புதாங்கிகள் நான்கினை கட்டுவதற்கு உடன்பட்டிருக்கிறார். அவருக்கு இன்னுமொரு ஆச்சரியம் அத்திட்டம் தொடர்பான நிதி ஒதுக்கீடு மற்றும் வரவுசெலவு விடய அறிக்கை அப்பெரியவரிடம் இருந்தது ஆகும். பெரியவரோ மூன்று தாங்கிகள் எமக்கு போதுமானவை எனக் கூறியபோதும் அதிகாரி மறுத்து நான்கு அமைத்து தருவதாக இப்போது கூறியிருக்கிறார். 'மணி கட்டின மாடுசொன்னால் கேட்காதவரும் இருப்பரோ?'

இவ்வாறு எத்தனை நான்குகள் ஒன்றாக மாறியிருக்கும். ஆயிரங்கள், இலட்சங்கள், கட்டடங்கள், பொருட்கள், நிவாரணங்கள்... இவ்வாறு எத்தனையோ...?

க. சத்தியவதனன், தென்மராட்சி.


ஆத்மா. இது உங்கள் இதழ். இதன் எப்பகுதிக்கும் நீங்கள் எழுத முடியும். இன்றைய நமது சமூகத்தின் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் இன்னும் சீர்கேடுகளையும் கண்டு மௌனமாக இருக்காது அவற்றை வெளியே கொண்டுவர ஆத்மா உங்களோடு சேர்ந்து நிற்கும்.
நீங்களும் மனிதத்தின் இருப்பைத் தேடும் பயணத்தில் இணைந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அவள் குடும்பப் படம்





"வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்"

முகமாலை நோக்கி புறப்பட்ட பஸ் வண்டியில் ஏறி பின்னிருக்கையில் அமர்ந்து கொண்டேன் நான். "பின் சீற்றில அஞ்சுபேர் இருக்க வேணும் ஐயா பின்னுக்கு போங்கோ" நடத்துனரின் குரலுக்கு மதிப்பளித்து "இதில இருக்கலாமா?" எனக் கேட்டபடி நின்றிருந்தார் சுமாராக நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர். "ஆம்" என்ற முகபாவனையுடன் நான் தள்ளி அமர்ந்து கொள்ள எனக்கு இடதுபுறமாக அமர்ந்திருந்த இளைஞனுக்கும் எனக்கும் நடுவே அமர்ந்து கொண்டார் அவர். அமர்ந்து கொண்ட உடனேயே எனக்கு வலது புறமாக அமர்ந்திருந்த இரு பெண்களுடைய உரையாடலுடன் இவரும் ஒருவராக கலந்து கொண்டார். எங்கோ ஒரு நிறுவனத்தில் வேலை பார்ப்பவர் என்பதை அவருடைய உரையாடலில் இருந்து என்னால் உணர முடிந்தது.

நல்ல கோடை காலம். வெயிலின் கொடுமை ஒருபுறம் சன நெருக்கம் மறுபுறம் வியர்வை வடிந்து கொண்டிருந்தது. கையில் அகப்பட்டதைக் கொண்டு காற்று விசுக்கியபடி காலநிலை, சுனாமி, வேலை, அரசியல், குடும்பம் என பல திக்குத்திசையெல்லாம் சென்றது இவர்களுடைய உரையாடல். நான் அமைதியாக அமர்ந்திருந்தேன். " நீங்கள் ரீச்சரா?" வஞ்சகமில்லாமல் என்னிடமும் கதை தொடுத்தார் அந்த பெரியவர். என்னையும் அந்த உரையாடலுக்குள் சேர்த்து விட வேண்டும் என்பதுபோல. "ஆம்" "எங்கு" "....." எனது பேச்சை நிறுத்திக் கொண்டேன். "பின்னுக்கு தள்ளிப் போங்கோ பின்னுக்கு நல்ல இடமிருக்கு" என்ற நடத்துனரின் கூச்சலுக்கு மத்தியில் பரந்தனை அடைந்தது பஸ்.

பெரியவர் அருகே அமர்ந்திருந்த இளைஞன் எழுந்து கொள்ள நின்று கொண்டிருந்த யுவதி ஒருத்தி அந்த இடத்தை நிறைத்துக் கொண்டாள். இப்போது பெரியவருடைய கவனம் அந்த யுவதியின் பக்கம் சென்றது. நான் நடுவே அகப்படாததை எண்ணி எனக்குள் ஒரு நிம்மதிப் பெருமூச்சு. யுவதியின் ஊர், பெயர், வேலை, சகோதரர்கள் என்று அவளது குடும்பநிலை, பொருளாதார நிலை இவ்வாறாக விசாரணைகள் தொடர்வது சாடைமாடையாக என் காதுகளில் விழுந்தது. ஒருமுறை அவளை திரும்பிப் பார்த்தேன். ஏதோ வேண்டாவெறுப்பாக பதில் சொல்பவள் போல் தென்பட்டாள்.

இப்பொழுது அவள் என்னைப் பார்த்து சிரித்தாள். அவள் அமைதியான சுபாவம் கொண்டவள் என்பதை எனக்கு உணர்த்தியது. பெரியவரோ அவளை விடுவதாக இல்லை. சிறிது நேரத்தில் தனது பாக்கில் எதையோ தேடுவதையும் பின்னர் ஒரு போட்டோவை அவளிடம் கொடுத்ததையும் நான் அவதானிக்கத் தவறவில்லை. 'தனது மனைவி பிள்ளைகளுடைய குடும்பப் படமாக்கும்' என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன். மீண்டும் அவள் என்பக்கம் திரும்பி சிரித்தாள். நானும் பதிலுக்கு புன்னகை புரிந்தேன். இம்முறை அவள் சிரிப்பது 'எனக்கு உதவி செய்ய மாட்டீங்களா?' என்று கேட்பதைப் போல ஓர் உணர்வு என்னுள் எழுந்தது. அவர்களுடைய உரையாடலுக்குள் நான் குறுக்கிடுவது தவறு என்றது என் மனம். என் மனதுக்குள் போராட்டம். அமைதியாக இருந்தேன். "ஏன் அங்க பாத்து சிரிக்கிறீங்க?" பெரியவர் அவளிடம் கேட்பது என்காதில் விழுகின்றது. அவள் ஏதோ சொல்கிறாள். பஸ்சின் இரைச்சலும் அதற்கு மேல் பஸ்ஸில் ஒலித்த பாடலின் சத்தத்துக்கும் மத்தியில் அவள் என்ன சொன்னாள் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவள் ஏதோ ஒன்றுக்கு அவரால் வற்புறுத்தப்படுவதாக உணர்ந்தேன். 'நீயும் ஒரு பெண்தானே அவளைக் காப்பாற்றக் கூடாதா? ஒரு பெண்ணுக்கு உதவி தேவைப்படும் பொழுது உதவி செய்யாமல் சும்மா வாயால கதைச்சு என்ன பயன் உதவி செய்', 'எப்படி நான் குறுக்கிடுவது' என் மனதுக்குள் போராட்டம் தொடர்ந்தது. அவள் எனக்கு மிகவும் நெருக்கமாகி விட்ட உணர்வு என் அடிமனதில் ஏற்பட்டதை என்னால் உணர முடிந்தது. இப்போது அவள் மீண்டும் என்னைப் பார்த்து சிரிக்கிறாள். இதுதான் சந்தர்ப்பம் என நினைத்து "என்ன கஸ்ரமாயிருக்கா?" "ஓமக்கா எனக்கு அம்மா அப்பாவை பாத்துச் செய்யிற கலியாணம்தான் விருப்பம். இந்தாள் ஆற்றையோ போடடோவை காட்டி....." அவள் முடிக்கவில்லை. "இவ யார்? உமக்குப் பழக்கமா? 'ஓம்' எனும் படி சாடை காட்டினேன். அவளும் அவ்வாறே சொல்ல இப்போது பெரியவர் என் பக்கம் திரும்பி விட்டார். "இல்ல ஒரு ஆணையோ பெண்ணையோ பாக்கேக்க இவவ செய்தால் நல்லம் எண்டு படுகிறது தானே. அதான் இவாட்ட நான் கேட்டனான்." "கலியாணம் பேசுறது பஸ்சுக்க இல்ல" "இல்ல நான் இப்ப கேக்கேல்ல. இவா ஓமெண்டா அப்பா அம்மாவையளிட்ட பிறகு கேக்கிறதுக்குத் தான்." "அதக் கேக்கிறதுக்கு இது சரியான நேரமில்ல" "இல்ல சீதனம் ஒண்டும் இல்ல. இப்பிடி வந்து அமையாது தானே. அதான்...." தனது உரையை நீட்டி முழக்கிக் கொண்டு போனார். "உம்மட கதையை இதோட நிப்பாட்டும். இதுக்கு மேல என்னோட கதைக்காதயும்". என்னால் அதற்கு மேல் அவருடைய கதையை பொறுக்க முடியவில்லை. "ஓங்கி அறைந்தால் என்ன? பொம்பிளையள் எண்டா என்னெணடு நினைச்சாங்கள். இவங்கள் எல்லாம் மனிசங்களா? இண்டைக்கு இதே கேள்விய ஒரு ஆம்பிளையிடம் இவன் கேட்டிருப்பானா?" மனம் கொதித்தது.

**"இல்ல ஒரு ஆணையோ பெண்ணையோ பாக்கேக்க இவவ செய்தால் நல்லம் எண்டுபடுகிறது தானே. அதான் இவாட்ட நான் கேட்டனான்."**



"பொம்பிளையள எங்க உங்கட தொந்தரவு இல்லாமல் போக விடுவீங்க? வழமையா நாங்க பஸ்சுக்க ஏறினா வேற தொல்ல. இது இண்டைக்கு புதுசா இருக்கு. இப்ப அந்தப் பிள்ளய அமைதியா வீட்ட போக விடும். வேல முடிச்சு களைச்சுப் போய் பஸ்சில ஏறினா உங்கட தொல்லை தாங்க முடியாது போல இருக்கு". என்று நான் கூறவும் அவன் பஸ்சை விட்டு இறங்கவும் சரியாக இருந்தது. பஸ் வண்டி இப்போது அமைதியாக சென்று கொண்டிருந்தது.

பயணி ——— ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு கிறிஸ்துவும் வெள்ளைச் சிங்கங்களும்



**மு**ன்பு ஒரு காலத்தில் மாணவர்களின் கொம்பாஸ் பெட்டியில் பென்சிலும், பென்னும், இரேசரும் வைத்திருந்த காலம் போய் முகக்கிறீம் பைக்கற்றையும் கண்ணாடியையும் கொண்டு செல்லும் புதிய ஒழுங்குமுறையை பின்பற்றத் தொடங்கியுள்ளனர். தங்கள் முகம், தலை அமைப்பு குலையும் போது தங்கள் மேசையில் இருந்தவாறே இவற்றை பூசிக்கொண்டு தங்களை அழகாக்கும் செயலை பாடவேளைகளாக கொண்டுள்ளனரோ என்று கருத வேண்டிய காலம் வந்துவிட்டது. தம்மை சிகப்பாக்குவதில் பெரும்பாலான நேரத்தை மாணவர்கள் செலவழிக்கத் தொடங்கியுள்ளனர்.

*"கண்ணா கருமை நிற வண்ணா உன்னைக் காணாத கண்ணில்லையே"*
*"கறுப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு"*
*"கறுப்பு நிலா நீதான் கலங்குவதேன்"*

இவை கறுப்பு நிறம் தொடர்பான சினிமாப் பாடல்கள்.

*'ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன்'*
*'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'*

இவைகள் கறுப்புத் தொடர்பான பழமொழிகள். இவை இரண்டும் கறுப்பு நிறத்தை போற்றுகின்றனவா? அல்லது கறுப்பு தரமற்றது, இழிவானது என்ற தாழ்வு மனப்பான்மையின் எதிர்விளைவா? எது சரி? அண்மையில் வாசிக்கக் கிடைத்த உயிர்மை (ஏப்ரல்) இதழில் 'கறுப்பு கிறிஸ்துவும் வெள்ளைச் சிங்கங்களும்' என்னும் கட்டுரை கறுப்பு வெள்ளை தொடர்பான பல விடயங்களை தந்துள்ளது. அதனை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

இன்று சிவப்பழகு பற்றி பல்வேறு விளம்பரங்கள் வருகின்றன. சருமத்தை வெண்மையாக்க கிறீம்களும், தைலங்களும், சோப்புக்களும் விளம்பரப்படுத்தப்படுகின்றன. இதன்படி சருமம் வெழுத்த பெண்ணைப் பார்த்து படம் நடிக்க விருப்பமா எனக் கேட்க, அவள் பரவசப்படுகிறாள். அது முடிகிறது. இன்னுமொன்றில் தடைப்பட்ட திருமணம் குறித்த கிறீம் ஒன்றை பாவிப்பதனால் நடந்து விடுகின்றது. கற்பனைகளையும் தாண்டி தருகின்ற போலியான சிந்தனைக்கு எதிராக யாரும் கேள்வி கேட்பதில்லை. ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் இவ்வாறு விளம்பரங்களில் குறித்த பயன் கிடைக்கவில்லையாயின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து விடுவார்கள்.

சிகப்பழகு கதைக்கு எதிராக கருப்பு அழகானது **(Black is beautiful)** எனும் சித்தாந்தம் ஆபிரிக்க அமெரிக்கர்களிடையே தான் முதலில் உருவானது. தம்மை மேன்மையான இனமாகக் கருதிய வெள்ளையர் இதர இனங்களில் இருந்து தம்மை பிரித்து வாழ ஆரம்பித்ததே **அபார்தெயிட்** என்ற இனப் பிரிவுக் கொள்கையாகும்.

தென்ஆபிரிக்காவில் நீடித்திருந்த 42 வருட கால நிறவெறி ஆட்சி 1990ல் முடிவுக்கு வந்தது. அப்போது 40 வருடங்களுக்கு மேலாக மறைத்து வைக்கப்பட்ட **'கறுப்பு கிறிஸ்து'** எனும் தலைப்பிட்ட ஓவியம் காட்சிக்கு வந்தது. தென்னாபிரிக்கா அதிர்ந்து போனது. இது அதிர்ந்து போனமைக்கு பல காரணங்கள் இருந்தன. ஒன்று கிறிஸ்துவாக வரையப்பட்டவர் நிறவெறிக்காக போராடிய ஆபிரிக்க விடுதலை வீரர் ஆல்பர்ட் ஒதுலி யோசுவா ஆவார். சுற்றிவர ஈட்டிகளுடனும் மற்றும் வேடிக்கை பார்ப்பவர்களும் கட்டளை இடுபவர்களும் நிறவெறி ஆட்சியின் பாதுகாவலர்களாக இருந்தனர். ஆல்பர்ட் ஒதுலியின் மீது ஈட்டியை செலுத்துபவர் தென்னாபிரிக்க பிரதமர் கென்றி பேர்வூட்டும், இவற்றை வேடிக்கை பார்க்கும் ஒருவராக அமைச்சர் ஊர்டரும் வரையப்பட்டிருந்தனர்.

நாசிகள் எவ்வாறு கிட்லரை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டனரோ அவ்வாறே பேர்வூட்டையும் ஆபிரிக்காவின் வெள்ளையர் நம்பினர். அதாவது தங்களையே கடவுளாக பார்க்கும் ஒரு நிலையை அவர்கள் வைத்திருந்தனர்.

***அபார்தெயிட் எனப்படும் நிறவெறிக்கு ஆதரவாக பைபிளின் பகுதிகள் எடுத்தாளப்பட்டன. காமின் (சேம், காம், யாபபேத்) மகனான் கானான் ஏனைய சகோதரர்களுக்கு அடிமையாக இருப்பான். (ஆதி. 9: 25-27) என்று பைபிள் கூறுகிறது. இதன்படி கானான் வழியில் ஆபிரிக்கர்களும் யாபேத் வழியாக வெள்ளைக்காரர்களும் வந்தார்கள் எனக்கூறி நிற வெறியை நம்ப வைத்தனர். உபஆகமம் 30:8ல் கடவுள் இனங்களையும் எல்லைகளையும் வகுத்தார் எனக்கூறி பாகுபாட்டை உறுதி செய்தனர்.***

எவ்வாறு வர்ண சாஸ்திரம் கடவுளின் பெயரால் இன்றுவரை கொடிகட்டி பறக்கிறதோ அவ்வாறே ஐரோப்பியரின் நாடுகாண் பயணங்களில் சிலுவையும் பைபிளும் தந்திரமாக பயன்படுத்தப்பட்டன. பைபிள் நிறவெறிக்கும் பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புகளுக்கும் துணைபோனது. ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பு, பாபர் மசூதியில் இருந்து காஞ்சி காமக்கோடி வரையான அனைத்தும் கடவுளர்களின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஓவியம் தொடர்பான விடயத்துக்கு வரும்போது ஓவியம் கறுப்பாக வரையப்பட்டது அதனைக் கேவலப்படுத்துவதாக வெள்ளை நிறத்தவர் ஆத்திரப்பட்டனர். கடவுளை எப்போதும் சிவப்பு நிற அழகனாக, வெள்ளை இனத்தவனாக கண்டவர்களுக்கு இவ் ஓவியம் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால் இவ் ஓவியமோ தென் ஆபிரிக்காவின் விடுதலைப் போருக்கு பின்னர் பெரும் சக்தியாக அமைந்தது.

வெள்ளைச் சிங்கத்தின் கதை என்னவென்று பார்ப்போம். பொதுவாக சிங்கங்கள் பழுப்பு நிறமானவை. தென்னாபிரிக்காவின் றைனோ லயன் என்னும் சரணாலயத்தில் வெள்ளைச் சிங்கங்கள் செயற்கையான முறையில் உருவாக்கப்படுகின்றன. வெள்ளை மயிர், வெள்ளைத்தோல் கொண்ட சிங்கங்கள் இனவிருத்தி செய்யப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுவது தவிர இவை ஏன் உருவாக்கப் படுகின்றன என்று தெரியவில்லை. ஆங்கில அகராதியில் கறுப்பு என்ற வார்த்தைக்கு பயங்கரமான, கீழ்த்தரமான, வெறுக்கத்தக்க என்னும் பொருள்கள் உள்ளன. உதாரணம் கறுப்பாடு **(Black sheep)** நெறிபிறழ்ந்த ஒருவனைக் குறிப்பது. கறுப்புப் புள்ளி **(black mark)** ஒழுங்கீனத்தின் குறியீடு. கறுப்புப் பணம் **(Black money)** கணக்குக் காட்டப்படாத சட்ட விரோத பணத்தைக் குறிக்கிறது. கறுப்புச் சந்தை **(Black market)** சட்ட விரோதமான சந்தை நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இதன்படி கறுப்பென்பது கெட்டது, கீழ்த்தரமானது, நாகரிகமற்றது என்ற கருத்தும் வெள்ளை என்பது தூய்மையானது, நாகரிகமானது என்ற சிந்தனை ஐரோப்பிய கருத்துருவாக்கம் ஆகும். இக்கட்டுரை ஆசிரியர் தனது கட்டுரையை சிங்கங்களை வெள்ளையாக் குவது நம்மூர் சிவப்பழகு கதைபோன்றுதான் என்று கூறி முடிக்கிறார்.

இதை வாசித்த பின் எனது நண்பர் ஒருவர் என்னிடம் எப்போதாவது கறுப்பினத்தவர் ஒருவர் பாப்பரசராக வந்திருக்கிறாரா? அல்லது வருவாரா? என்றார். இன்றுவரை இக்கேள்விக்கு என்னால் விடை காண முடியவில்லை. ■

கருநிலவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோசிக்கமறுக்கும் சனசமூக நிலையங்கள்

**"உங்கட சனசமூக நிலையத் தலைவர தெரியுமே" "தலைவரா? எந்தத் தலைவர்"**

**"உங்கட சனசமூக நிலையம் இயங்குதே"**

**"அதென்ன இயக்கமா? நாலு பேப்பர் போடுவினம், பூட்டுவினம், திறப்பினம் அவ்வளவுதான்".**

**"உங்கட ஊரில சனசமூக நிலையம் இருக்கா?" "அத ஏன் கேக்கிறியள் ஆரும் காசு குடுத்தா ஏதாவது நடக்கும். கட்சிகள் சீற்றையும், சீமெந்தையும் குடுத்தார்கள் எண்டா எங்கட சனசமூக நிலையம் இருக்குது எண்டு தெரியும்".**

**"எங்கட சனசமூக நிலையத்துக்கு பேர் காசு வாங்குற நிலையம். நிலையம் நிலையம் எண்டு கத்தினா அதில விசயம் இருக்கு."**

**"சனசமூக நிலையத்தில் கட்டிட வேலை நடக்குது எண்டா நிர்வாகிகளின்ர வீடு உயரும் அவயள் சண்ட பிடிக்கேக்க இதெல்லாம் வெளியால வரும்."**

**"அங்க என்ன நடக்குது எண்டு தெரியாது. ஆண்டு விழா நடக்கேக்க காசு வாங்குவினம் விடிய விடிய பாட்டும் கூத்தும் நடக்கும், விளையாட்டு நடக்கும். பேந்து ஆடு, மாடு தான் கிடக்கும்"**

**80** கள் 90 களில் சனசமூக நிலையங்களின் செயற்பாட்டை நினைத்தப் பாாக்கின்றேன். சமூகத்தை நிர்வகிக்கக்கூடிய வல்லமையும், ஆளுமையும் அதனிடம் இருந்தது. சனசமூக நிலையத்தை சுற்றி எப்போதும் அப்பகுதி மக்கள் கூடியிருப்பார்கள். சனசமூகத்தை சுற்றி அமைக்கப்படடுள்ள பிரத்தியேக கோபுரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கியில் செய்தியும் நிகழ்ச்சியும் கேட்டுக்கொண்டிருக்கும். நிலையத்தைச்சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் கல்லிருக்கைகளில் அமைதியான மாலையை இரசித்துக் கொண்டிருக்கும் ஊரின் முதியவர்கள். இரவு ஒன்பது மணிவரை அரசாங்க வேலைகளுக்கு செல்பவர்களுக்கு வசதியாக நிலையம் திறந்திருக்கும்.

எனது வாசிப்பு பழக்கத்தின் ஊற்றாக எனது நிலையத்தையே நினைக்கின்றேன். மேசைகள் மீது ஒழுங்காக கட்டப்பட்ட சஞ்சிகைகளை, நூால்களை, வெளியீடுகளை ஓடிஓடிசென்று வாசித்த அனுபவம் அலாதியானது. பாடசாலை விட்டதும் சாப்பிட்டு விட்டு பின்னொழுங்கையால் உடனே நிலையத்துக்கு சென்று விடுவேன். நூலகத்திலே எனது நண்பர்கள் என்னை சந்திப்பார்கள். நிலையத்துக்கென தெரிவு செய்யப்படும் ஆளுமையுள்ள தலைவர்களை நினைக்கிறேன். நிலையத்துக்காக வாழ்ந்து போனவர்கள் அவர்கள். பிரச்சினைகள் வரும் போது "நிலையத்தலைவரை கூப்பிடு" என்று சொல்லுமளவிற்கு நிலைய நிர்வாகம் ஆரோக்கியமானதாகவும், நேர்மையானதாகவும் இருந்தது. நிலையத்தின் உப அலகுகளாக மாதர் சங்கம், இளைஞர் கழகம், இரவல்கொடுக்கம் பகுதி, சிறுவர் கழகம், தொழிலாளர் சங்கம் என ஊரில் அனை வரையும் இணைத்துக்கொண்டு ஊரையே நிர்வகிக்கும் பலம் வாய்ந்த அமைப்பாக அது இயங்கியது. பங்கர் வெட்ட வேண்டும் என்றாலும், விழிப்புக்குழு இயங்க வேண்டும் என்றாலும் நிலையம் தான் அவற்றையும் செயல்படுத்தும்.

நான் சந்தித்த நிலையங்கள் கேட்பாரற்று கிடக்கின்றன. நிலையம் ஒன்றின் திறப்பு பக்கத்து கடைக்காரனிடம் இருக்கும். அவர்தான் வந்து திறப்பார், மூடுவார் அவர் போகும் போது திறப்போடு சென்று விடுவார். இன்னுமொரு நிலையத்தில் உள்ளே செல்ல முடியாது. வாசலிலே இளைஞர்கள் கால் நீட்டி காற்றுவாங்கிக் கொண்டு இருப்பார்கள், கிடப்பார்கள். அவர்களை கடந்துதான் உள்ளே செல்ல முடியும்.

அண்மையில் நிலையம் ஒன்றின் இளைஞர் அமைப்பின் புதிய நிர்வாகக் கூட்டம் ஒன்றிற்கு சென்றிருந்தேன். அறிக்கையை வாசிக்கத் தொடங்கினால் செயலாளர் இல்லை, பொருளாளர் இராஜினாமா, ஆலோசகர் இல்லை இந்நிலையில் அறிக்கை தொடர்ந்தது. ஆனால் அது கடந்த வருடம் அம்மன்றம் தொடங்கும்போது எழுதப்பட்ட அங்குரார்ப்பண அறிக்கை. இத்தனைக்கும் அம்மன்றம் இளைஞர் சேவை ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது.

**நிலையங்களின் பலவீனங்களை பயன்படுத்தி கட்சிகள் சீமெந்து, சீற், காசு என்பனவற்றை வழங்கி இன்னும் அவற்றை கீழ்நிலைக்கு கொண்டு சென்றிருக்கின்றன.**

நிலையம் ஒன்றுக்கு கட்சி ஒன்றினால் வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டது பற்றி ஐந்து வருடமாகியும் நிலைய நிர்வாகம் பொது மக்களுக்கு இன்னும் கணக்கு காட்டவில்லை. ஆனால் குறித்த நிர்வாகம் கலைக்கப்பட்டு இப்போது மூன்றாவது கைக்கு அது மாறியுள்ளது. ஆனால் இன்னும் முடிவு வரவில்லை.

**இன்னுமொரு நிலைய அனுபவம். கட்சிகள் நான் முந்தி நீ முந்தி என்று அடிபடுகின்ற தேர்தல் சூழலில் அமைச்சர் ஒருவர் சீற்றையும், சீமெந்தையும் நிலையங்களுக்கு வழங்கினார். யாழ்ப்பாணத்தில் மூடிக்கிடந்த நூலகங்கள் துயில் கலைந்து எழுந்தன. திடீரென தலைவர்கள் முளைத்தனர். தன்வீடு, அக்காவீடு, ஆச்சி வீடு, அன்ரி வீடு, மாமி வீடு என்று அதிரடியாய் அனைத்தும் விநியோகம் செய்யப்பட்டு கட்டி முடிக்கப்பட்டன. அத்தோடு நிர்வாகமும் முடிந்துவிட்டது.**

பரீட்சை புள்ளிவிபரங்கள் தொடர்பாக ஊரில் தலைவர்களோடு.......? கலந்துரையாடலுக்கு ஒழுங்குசெய்தேன். பிள்ளைகளின் கற்றல் நிலைக்கு சூழல் மிக அவசியம் என்பதை வலியுறுத்தி சூழலை ஆரோக்கிய மாக்கித் தாருங்கள் நாங்கள் கற்பிக்கின்றோம். என்று கூறியபோது "நாங்கள் எங்கட சம்பளத்த விட்டுட்டு இதைச் செய்தா எங்கட வீட்ட ஆர் பாக்கிறது." என்று கொதித்துப் போனார்கள் அவர்கள். இது முடிந்து ஓரிரு கிழமை இருக்கும் குறித்த பிரதேசமும் யாழ் மாநகர அபிவிருத்தி திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இருபது கிராமத்தில் ஒன்றாக இருபது லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. எவர்கள் தமது சம்பளம் பறிபோய் விடும் என கொதித்தார்களோ அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் அபிவிருத்திப்பணியில் குதித்துவிட்டார்கள். இதுபற்றி முதியவர் ஒருவரை வினாவிய போது "தம்பி இதில ஈடுபடுறவங்க தங்கட சொந்தக்காசில இந்த நிலையத்துக்கு ஏதாவது செய்தவங்க எண்டு சொல்லட்டும் பாப்பம். ஒரு சதம் கூட செலவழிச்சு இருப்பாங்களோ தெரியாது. ஆனா காசு வாங்குற திட்டம் எண்டா வந்திடுவாங்க. எங்க இவங்க சொல்லட்டும் பார்ப்பம் தாங்க வெள்ளையெண்டு" என்றார்.

**இருபது இலட்சம் ஒதுக்கீட்டில் இன்னுமொரு நிலைய நிர்வாகிகள் தலையை பிய்த்துக்கொண்டு வந்தனர். இவர்களின் நிலையத்திற்கும் இன்னுமொரு நிலையத் திற்கும், இடையில் இருக்கும் ஒருசிலர் வந்து ஒருபெயரைச்சொல்லி அப்படி ஒரு நிலையம் இயங்குவதாகவும், அந்தக் காசில் தமக்கும் பங்குவேண்டுமென்று கேட்டார்களாம். மொத்தத்தில் இருபது இலட்சத்திற்கு மூன்று பகுதியினரும் மோதுகின்றனர்.**


மழைகாலங்களில் ஆடு மாடுகள், நாய் பூனைகள் பத்திரிகை பார்க்க வந்துவிடும். நூலகம் ஒன்றுக்கு சென்று ஒரு கிழமைக்கு முன்னர் வந்த பத்திரிகையொன்றைக் கேட்டேன். "அந்தா அங்க கிடக்குது தடவிஎடுங்கோ" என்றனர். ஒரு பூட்ட முடியாத அலுமாரியில் நகரசபை வாகனமொன்றில் ஏற்றப்பட்ட குப்பைகள் போன்று பத்திரிகைகள் கிடந்தன. இன்றுவரை நானோ தேடிக் கொண்டிருக்கின்றேன்.

சமூகமயமாக்கலுக்கு ஆதாரமான சமூக நிறுவனங்களில் ஒன்றான நிலையங்களின் நிலை பரிதாபகரமானது. இன்றைய குழப்பமான சீரழிவான சமூகச்சூழலில் நிலையங்கள் சிறப்பாக இயங்க வேண்டும்.

நிலையம் ஒவ்வொன்றும் அவ்வவ் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பலம் பொருந்திய அமைப்பாக இருக்கும்போது அவ்வூரையாவது நல்வழிப்படுத்தலாம் அல்லவா....? — [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வயல்



**எதிர்காலம்........**

குழந்தாய்!
அரசியல்களின்
அடாவடித்தனங்கள் 'மனிதம்' மறைந்த
மனோபாவம் நிறைந்த
மனிதர்களின்
வரம்புமீறிய
வன்முறைகள்
காலமறியா
கலாச்சார சீர்கேடுகள்
இளம் சமூகத்தினரின்
இனம் காணப்படாத இம்சைகள் - எம்
மண்ணில்
மலிந்து காணப்படுவதனாலோ – நீ
உன்
எதிர்காலத்தை எண்ணி
எம் மண்ணில் கால்பதிக்க மறுக்கிறாய்
போலும்

**இ.மேரி**
**திருநகர்,**

**விரைந்திடு**


துள்ளி விளையாடும் -மழலை
உன் பாதம்
பாரினில் பல சாதனை
படைக்க விரைந்திடும் -உந்தன்
திருவடி ஏன்
தனிமையில் இருக்கிறது?
மழலையே எழுந்து விரைந்திடு
விடியல் உனக்காய் காத்திருக்கின்றது
வீர மைந்தனாய் எழு.

**குயின்**

**வெற்றியின் பாதையில்**

மனிதா உன் கால்கள்
தள்ளாடுகின்றதா? தள்ளாடாதே
வெற்றியின் இலக்கை நோக்கி
வீறுகொண்டு நடந்திடு
தள்ளாடுவது உன் கால்கள் -அல்ல
உன் மனமே
கெட்டு அழிந்துகொண்டிருக்கும்
சமுதாயத்தில் இருந்து
நிமிர்ந்து நின்றிடு
மனம் தளராதே
சோர்ந்து போகாதே
வீறு கொண்டு நடந்திடு
வெற்றி உனக்கே.

**ஜெ. ஜெலிற்றா**
**குருநகர்**



**துணிந்தெழு சிறுமியே**

சிறுமியே
நீ ஏன் இருக்கையில்
கால்களை பூமியில் படாதவாறு
மேலே தூக்கி வைத்திருக்கிறாய்
உனக்கு இந்த வையகத்தில்
ஊன்றிக் கால் பதிக்க
அருவருப்பாக இருக்கிறதா?
வீரத்துடன் கீழே
உன் கால்களை
தடம் பதி
அப்போது தான்
தடம் புரளும்
எமது
மனித சமூகத்தை
இப்பூமிதனிலே
இன்பமாய் வாழ வழி சமைக்கலாம்

**பா.மேரி**
**பாசையூர்**

**யார் வருவார்**


சீர்கெட்ட அரசியலும்
நேர்கெட்ட வாழ்முறையும் கொண்ட
பாழ்பட்ட மனிதர்களின்
கால்பட்ட மண்ணில் - உன்
பாதம் பட மறுக்கிறதோ? – நீ
மறுத்தால்
வளமான எம் மண்ணை
உயிரான எம் நிலத்தை
வரலாற்று வரியில்
கால் பதித்திட
யார் வருவார்......?!

**இ. விஜிதா**
**திருநகர்**

## 2 வது வருகைக்காலம்

இது மிகவும் அற்புதமான காலம்
ஆடு மாடு சிங்கத்துடனும்
புறாக்களும் மைனாக்களும்
கழுகுகளுடன்
ஒரே
கூட்டில்
உண்டு மகிழ முடியும்.
ஒரு புன்னகை போதும்
நீயும்
உன் எதிரியும் கை குலுக்க
முடியும்
உன் முற்றத்தில்
எதிரி
காற்பந்து விளையாட முடியும்.
ஒரு
அனுமதி போதும்
நீ பாதுகாப்புடன்
துரோகியின் வீட்டில் படுத்துறங்க
முடியும்
டிரக்கும் பஸ் வண்டியும்
மோதும்
டிரக் மட்டும் எரியும்.
நிலைமை சீராகும்.
பூரண ஹர்த்தால் நடக்கும்
பேரலையாக ஆட்கள்
திரள்வார்கள்
அன்றிரவு
வெசாக் இன்னிசை இரவு
நிரம்பி வழியும்
பாதைமறித்து
பேரணி செல்லும்
பாதையில் பின்னிரவில்
முண்டம் ஒன்று கிடக்கும்
மீட்பரின் இரண்டாவது
வருகைக்காலம்.

**சத்தியன்**



இது அடுத்த ஆத்மாவின் புதிய வயலுக்கான படம். கட்டுரை, கவிதை, கதை எதுவாக இருந்தாலும் சமூக விழிப்புணர்வை தரக்கூடிய எத்தகைய படைப்பானாலும் எழுதி அனுப்புங்கள். நாம் பிரசுரிப்போம். சமூகம் உயர்ச்சி பெற எழுதுங்கள். 30.08.2005க்கு முன்னர் படைப்புக்கள் வந்தடை யட்டும்.

ஆத்மா
புதிய வயல்
40, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

**ஆத்மாவின் வாசகர்களுக்கு,**

ஆத்மா உங்களின் ஆத்மார்த்த பத்திரிகை. சிறுவர்கள் பிரச்சினை தொடர்பாக - அக்கினிக் குஞ்சு பகுதியும், பெண்கள் தொடர்பான விடயத்துக்கு அவள் பகுதியும், கலை இலக்கியம் தொடர்பாக கலைக்காற்றுப் பகுதியும். கவிதை தொடர்பாக புதிய வயல் பகுதியும் ஆத்மாவின் பிரதான விடய உள்ளடக்கங்களாக இருக்கின்றன. இவற்றைவிட பொது விடயங்கள் தொடர்பான கட்டுரைகளையும் அவ்வப்போது தாங்கி வருகிறது. நீங்கள் ஆத்மாவின் எப்பகுதிக்கும் எழுதமுடியும். எமது முகவரி

ஆத்மா,
இல. 40, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மதரிசனம்

## வரலாற்றுச் சுழி

தென்னிலங்கையில் சிங்கள பேரின பெருமத வாதத்தின் நாடகம் விறுவிறுப்பாக அரங்கேறி வருகிறது. திரைகள் ஒவ்வொன்றாக விலக விலக அதன் கோரமுகம் தெளிவாகவே தெரியத் தொடங்கியிருக்கின்றது. அரசு அடிப்பது போல் அடிக்க, மக்கள் விடுதலை முன்னணி அழுவது போல் அழ, உயர் நீதிமன்றம் சுனாமிப் பொதுக்கட்டமைப்பின் சில பகுதிகள் மீது இடைக்கால தடை பிறப்பித்துள்ளது. பொதுக்கட்டமைப்பின் பல்லைப் பிடுங்கி விட்டது ஜே.வி.பியின் வெற்றி; வட-கிழக்கில் பாதிக்கப்பட்ட ஏழை முஸ்லீம், தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காமல் தடுத்து விட்டது சிங்கள, பௌத்த பேரின மதவாதிகளுக்கு வெற்றி; ஆக இலவு காத்து ஏமாந்தது என்னவோ முதலில் போரினாலும், பின்னர் பேரலையினாலும் பெருமழிவைச் சந்தித்த ஏழை மக்கள்தான்.

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து எதையும் எதிர்பார்ப்பது வட-கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு இலவு காப்புத்தான் என்பதை நாம் தொடர்ந்து இவ்வாசிரியர் கருத்தில் குறிப்பிட்டே வருகின்றோம். மீளவும், மீளவும் ஒன்றையே சொல்ல ஏதோபோல இருந்தாலும் நம்பிக்கையற்ற எதிர்மறையான நோக்கு என்று "முரண்பாடுகளை தீர்க்க" கற்பவர்களுக்கு தோன்றினாலும் உண்மைகளை உரைப்பதும் திரும்பத் திரும்பச் சொல்வதும், விழிப்பாயிருக்க அழைப்பதும் ஒரு ஆத்மார்த்தமான கடமையாகும்.

அதிசயிக்கத்தக்க விதமாய் மூன்றாண்டு நீடித்து விட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தனது இயற்கை மரணத்தை நோக்கி வெகுவேகமாக நகர்ந்து வருவதை பிள்ளையை அவசர சிகிச்சை பிரிவில் வைத்துவிட்டு வெளியே பதகளிப்போடு காத்துக் கொண்டிருக்கும் தாயின் மன நிலையோடு அவதானித்து வருகின்றோம். ஏதாவது அதிசயம் நிகழ்ந்து குழந்தை மீண்டு வரவேண்டும் என்பது தான் எல்லோரதும் ஆசை. ஆனால் அது ஓர் நப்பாசை யாக அமைவதற்கே சாத்தியப்பாடுகள் அதிகமாக தெரிகின்றன. சர்வதேச தொழில்நுட்ப வசதிகளுடன் இழுத்துப் பிடித்து நீடிக்கப்படும் ஆயுள் இன்னும் எத்தனை காலத்துக்கு என்பது தெரியாத நிலையில் வரலாற்றின் சுழற்சிக்குள்ளே வேகமாக இழுக்கப்படுகின்றோம்.

வரலாற்றுச் சுழியை எதிர்த்து நீந்துவது என்பது தனி மனிதர்களால் முடியாத காரியம் என்பது எமக்குத் தெரியும். இணைந்து நிற்பதுதான் வரலாற்றுப்பாடம் காட்டும் வழி. இதையுணர்ந்து வட-கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக செயற்படுவதும் சிந்திப்பதும் அவசியமாகின்றது. செயற்படுவோமா?

ஆசிரியர் குழு

(5ம் பக்க தொடர்ச்சி)

சிங்கள சமூக அமைப்பில் மேலாதிக்க சாதியினரான ***கொவிகம*** சாதியினரின் பௌத்த பிக்குகள் தோளைக் காட்டியபடி காவியுடை அணிந்திருப்பர். இவர்கள் மல்வத்த, அஸ்கிரிய நிக்காயக்களை சேர்ந்தவர்கள். மத்திய காலத்தில் கோவிகம சாதியில்லாத பிக்குகளை ***உபசம்பதா*** என்ற பிக்கு பட்டச் சடங்கைச் செய்ய உயர் சாதியினர் என்று சொல்லிக்கொண்ட நிக்காய தலைமை பிக்குகள் மறுத்ததால் தாய்லாந்து நாட்டிலிருந்து சீயம் பிக்குகளை அழைத்து சடங்கை நிறைவேற்றினர். இப்பிரிவை இராமஞ நிக்காய அல்லது சீயம் நிக்காய என அழைப்பர். இவர்கள் தோளை மூடியே காவி உடை அணிவர். இவர்கள் அதிகமாக இடதுசாரி கட்சிகளை ஆதரிப்பர். தற்போது குறிப்பாக இவர்கள் ஜே.வி.பி. யின் ஆதரவாளர்கள்.

## சுனாமிப் புத்தர் சிலைகள்

சுனாமிப் பேரலையின் அழிவுகளின் சமூக பொருண்மியப் பரிமாணம் அளப்பரியது. ஆனாலும் இலங்கைத் தீவில் சுனாமி அலைகளின் அதிர்வுகள் அரசியலில் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ள போதிலும் இலங்கைத் தீவின் அரசியலில் பௌத்த சிங்கள அடிப்படைவாதம் இலங்கை அரசியலில் மேலாண்மை பெறுவது புதியதல்ல. முதலில் ***உல்லை***, பின்னர் ***திருகோணமலை, ஓமந்தை*** என வரிசையாகப் புத்தர் சிலைகள் முளை விட்டிருப்பது இலங்கை அரசியலிலோ, மக்களின் வெகுஜன மத வழிபாட்டு முறையிலோ பெரிய அதிசயமில்லை. என்றாலும் யுத்த நிறுத்த காலங்களிலும் சுனாமி அனர்த்தத்தின் பின்னும் மற்றும் நீதிவாக்க பின்னணியிலும் இச்சர்ச்சை பலத்த விவாதத்தையும் இன நெருக்கடியையும் உருவாக்கியுள்ளது.

## வலுவற்ற சட்டவாக்கமும் அரசநீதியும்

தமிழ் மக்களின் சாத்வீக எதிர்ப்புகள் அனைத்தும் சட்டவாக்கத்திற்கு அப்பால் காடைத்தனத்தாலும் அரச பயங்கர வாதத்தாலும் அடக்கப்பட்டது. இந்த காடைத்தனங்கள் அனைத்தும் பேரினவாத அரசியல்வாதிகளின் அதிகாரத்தோடும், பௌத்த பிக்குகளின் வழிகாட்டலோடும் நடத்தப்பட்டவையே. சட்டத்தைப் பேணவேண்டிய நிர்வாக அலகுகள் வெறும் பார்வையாளராகவும் சிலவேளைகளில் ஊக்குவிப்பாளராகவும் இருந்துள்ளதைக் காணலாம். கட்சிகள் மாறியவேளையிலும் இவர்கள் சட்டவாக்கத்தில் பலமாகப் பாதுகாக்கப்பட்டனர். நீதியோடு நடக்க முயன்ற சில நீதித்துறையினரும் தேசிய எதிரிகளாக்கப்பட்டு அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்பட்டனர். இவ்வதிகாரிகள் தமிழராக அமைந்துவிட்டால் பழி சுமத்துவது இலகுமட்டுமல்ல இதை ஊதி பெருப்பித்துக் கொள்வது பிரச்சாரத்துக்கு வசதியாகவும் அமைந்தது.

## பொதுக்கட்டமைப்பு ஒரு மாயமான்

பிக்குகளின் வருகை புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மூன்று நிக்காயவின் பிக்குகள் இக்கட்சியமைப்பை உருவாக்கியதும் மூன்று நிக்காய மகாநாயக்கர்களும் சேர்ந்தே பொது கூட்டமைப்புக்கும், விடுதலைப்புலிகளுக்கு எதிராக மடல் அனுப்பியுள்ளதும் இலங்கை அரசியலில் புதிய பரிமாணமாகும். பொதுக் கூட்டமைப்பு எதிர்ப்பில் ஜே.வி.பி பின்னடைவை பெற்றபோதிலும் சிங்கள ஹெலஉறுமய பிக்குகள் அவ்விடத்தை நிரப்பியுள்ளனர். பிரச்சாரிகளின் சார்புகள் மாறினாலும் இலங்கையின் அதிகாரக் கட்டமைப்பில் பொதுக் கூட்டமைப்பு ஒரு மாயமான்தான்.

அநாகரிக தர்மபால ஊட்டிய சிங்கள் நாசிசத்தின் பிரதிபலிப்பின் வரலாற்றுத் தொடரே சிஹெல உறுமயவும், ஜே.வி. பியினரும் நடத்தும் அரசியல் நாடகம் என்றாலும் நாடக மாந்தர் மாறியுள்ளனர். ■

சாவிகி

**சந்தா விபரம்**

தபால் செலவு உட்பட 12 இதழ்களுக்கான கட்டணம் ரூபா 100 மட்டுமே. காசுக்கட்டளைகளை குருநகர் உபதபாற் கந்தோரில் மாற்றும் வகையில் அனுப்பவேண்டிய முகவரி

பிரதம ஆசிரியர், 'ஆத்மா'
மனிதம் கலந்தாய்வுக் குழு,
இல. 40,கோயில் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை இல. 40, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் மனிதம் கலந்தாய்வுக் குழுவினரால் பக்க வடிவமைப்புச் செய்யப்பட்டு, இல. 267, நாவலர் வீதி சுரபி பதிப்பகத்தில் அச்சிட்டு ஓகஸ்ட், 2005ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org